

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.9.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட வி.அருண் ராய் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.9.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் - கொளத்தூர் - இராஜாதோட்டம் திட்டப்பகுதியில்

# ரூ.27.03 கோடி மதிப்பில் - 162 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, செப்.13-

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கொளத்தூர், இராஜாதோட்டம் திட்டப்பகுதியில், ரூ.27.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 162 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.9.2023) சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராஜாதோட்டம் திட்டப்பகுதியில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 27 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 162 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புர ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி முதலமைச்சர் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கொளத்தூர், இராஜாதோட்டம் திட்டப் பகுதியில் 162 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

கொளத்தூர், இராஜாதோட்டம் திட்டப்பகுதியில் 1975ஆம் ஆண்டு 326 சதுர அடியில் தரை மற்றும் 2 தளங்களுடன் கட்டப்பட்ட 84 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 27 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூண் மற்றும் 9 தளங்களுடன் 162 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இப்புதிய அடுக்குமாடி குடியிருப்புகளில், ஒவ்வொரு குடியிருப்புகளும் 410 சதுர அடி பரப்பளவில், பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, தனித்தனியே குளியலறை மற்றும் கழிப்பறை ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சார வசதி, குடிநீர் வசதி ஏற்படுத்தி தரப்படவுள்ளது. இத்திட்டப்பகுதியில் இரண்டு மின்தூக்கிகள் மற்றும் மின்னாக்கி (Generator) வசதிகள், மழைநீர் கால்வாய்கள், தெரு விளக்குகள், மற்றும் கான்கீரிட் சாலைகள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளது.

இங்கு கட்டப்படும் குடியிருப்புகள் ஏற்கனவே இருந்த 84 குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்படும். ஒரு குடியிருப்பிற்கான கட்டுமான தொகை 17 இலட்சம் ரூபாயாகும். இக்குடியிருப்பிற்கு தமிழ்நாடு அரசு மானியம் 7 இலட்சம் ரூபாயும், ஒன்றிய அரசு மானியம் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், ஏற்கனவே இங்கு வசித்த மறுகட்டுமான பயனாளிகளின் நலன் கருதி மீதமுள்ள தொகையில், 7 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாயை தமிழ்நாடு அரசே ஏற்று பயனாளிகளின் பங்களிப்பு தொகையை 83 ஆயிரம் ரூபாய் என நிர்ணயித்து அரசு ஆணையிட்டுள்ளது.

மீதமுள்ள 78 குடியிருப்புகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்படவுள்ளது. அவர்களுக்கு 7 இலட்சம் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்ட பயனாளி பங்களிப்புத் தொகையை தமிழ்நாடு அரசு கவனமுடன் பரிசீலித்து 2 இலட்சம் ரூபாயை குறைத்து 5 இலட்சம் ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மறு குடியமர்வு செய்யவுள்ள குடியிருப்புதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையினை 8,000 ரூபாயிலிருந்து 24,000 ரூபாயாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உயர்த்தி வழங்க உத்தரவிட்டிருந்தார். அதன்படி, இராஜாதோட்டம் திட்டப்பகுதியில் மறுகுடியமர்வு செய்யப்படவுள்ள 84 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத்தொகையாக தலா 24 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 20 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் முதலமைச்சர் அவர்களால் 30.8.2022 அன்று வழங்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 1583.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 15,505 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கொளத்தூர் பகுதியில் - புனரமைக்கப்பட்ட ஆனந்தன் பூங்கா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, செப்.13-

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புனரமைக்கப்பட்ட ஆனந்தன் பூங்காவைத் திறந்து வைத்து, திரு.வி.க. நகர் பேருந்து நிலையத்தை புனரமைக்கும் பணி மற்றும் 20 மறுசீரமைப்புப் பணிகளை தொடங்கி வைத்து, அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் தையல் இயந்திரங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.9.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தான்தோன்றி அம்மன் கோயில் தெருவில் 11 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட ஆனந்தன் பூங்காவை திறந்து வைத்து, 6 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திரு.வி.க. நகர் பேருந்து நிலையம் புனரமைக்கும் பணி மற்றும் கொளத்தூர் பகுதியில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 20 மறுசீரமைப்புப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எஸ்.ஆர்.பி. கோயில் (வடக்கு) பகுதியில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 6 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர்கள் அறைகள், முதலுதவி அறை, பயணிகள் காத்திருக்கும் அறை, கடைகள், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் புனரமைக்கப்படவுள்ள திரு.வி.க. நகர் பேருந்து நிலையப் பணியினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலம், தான்தோன்றி அம்மன் கோவில் தெருவில். மூலதன நிதியின் கீழ், 11 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் நடைபாதை வசதி, பசுமை புல்வெளி, நீரூற்றுக்கு 20 HP மோட்டார், பெஞ்சுகள், மின் வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ள ஆனந்தன் பூங்காவை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர், திரு.வி.க. நகர் மண்டலம், பூம்புகார் நகர் 4வது குறுக்குத் தெரு பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மூலதன பராமரிப்பு நிதியின் கீழ் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், திரு.வி.க.நகர் 4வது தெருவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் மையம், ஜெய்பீம் நகர் 1வது தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், தீட்டித்தோட்டம் 1வது தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், குருசாமி தெருவில் அமைந்துள்ள ஜார்ஜ் காலனி பூங்கா, சென்னை சதுக்கம், சென்னை 1வது தெருவில் அமைந்துள்ள கென்னடி சதுக்கம் பூங்கா, பல்லவன் சாலையில் அமைந்துள்ள கே.கே.ஆர். அவென்யூ பூங்கா, ஜவஹர் நகர் 5வது பிரதான சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி பூங்கா, மஹாவீர் நகரில் அமைந்துள்ள பூங்கா, அஞ்சுகம் நகர் 4வது தெருவில் அமைந்துள்ள பூங்கா ஆகியவற்றை சீரமைக்கும் பணிகள்; ராம் நகர் 2வது பிரதான சாலையில் அமைந்துள்ள விளையாட்டுத் திடலில் நடைபாதை அமைத்தல் மற்றும் இதர மேம்படுத்தும் பணிகள், பூம்புகார் நகர் 4வது தெருவில் அமைந்துள்ள பூங்காவிற்கு நடைபாதை நீட்டிப்புப் பணி, பல்லவன் சாலையில் அமைந்துள்ள தாங்கல் மயான பூமியில் LPG தகன மேடையாக மாற்றும் பணி, எஸ்.ஆர்.பி. கோவில் வடக்குத் தெருவில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்யாண மண்டபத்தில் தரைத்தளத்தில் பாத்திரங்கள் கழுவும் அறை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி, சுப்பிரமணியபுரம் 2வது தெருவில் உள்ள வார்டு அலுவலகத்தை மேம்படுத்தும் பணி, சீனிவாசா நகர் 3வது தெருவில் அமைந்துள்ள சென்னை தொடக்கப் பள்ளி வளாகத்தில் பழுது பார்த்தல் மற்றும் மேம்படுத்தும் பணி, அஞ்சுகம் நகர் 18வது தெருவில் அமைந்துள்ள அம்மா உணவகத்தை பழுது பார்த்து மேம்படுத்தும் பணி, ஹரிதாஸ் நகர் 1வது தெருவில் அமைந்துள்ள தாமரைக் குளத்தை பழுது பார்த்து மேம்படுத்தும் பணி, காமராஜர் நகரில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை மேம்படுத்தும் பணி, நேர்மை நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தை மேம்படுத்தும் பணி, எஸ்.ஆர்.பி. கோவில் வடக்குத் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப் பள்ளியை மறுசீரமைக்கும் பணி ஆகிய 20 மறுசீரமைப்புப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, வீனஸ் எவர்வின் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் Tally பயிற்சி முடித்த 136 மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினிகளையும், தையல் பயற்சி முடித்த 359 பெண்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் மோட்டார் பொருத்திய இலவச தையல் இயந்திரங்களையும் முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் இரா. நரேந்திரன், திருமதி. ஹெலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; "சனாதன தர்மத்திற்கு எதிராக யார் பேசினாலும், அவர்களுடைய நாக்கு பிடுங்கி எறியப்படும் ( Tongue will be pulled out ); அவர்களுடைய கண்கள் பறிக்கப்படும் ( Eyes will be plucked out ) ;" என்று ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பேசியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம்; அப்படித்தான் கடும் வன்முறையைக் கக்கியிருக்கிறார்.**

**ராஜஸ்தான் மாநிலத் தேர்தலையொட்டி நடந்த யாத்திரையில் அவர் அப்படி ஆவேசப்பட்டு வெடித்திருக்கிறார்.**

**ஒன்றிய அமைச்சரே வன்முறையைத் தூண்டிவிடும் வகையில்,நாக்கைப் பிடுங்க வேண்டும், கண்ணைப் பறிக்க வேண்டும் என்று பேசியிருப்பது தண்டனைக்குரிய கொடுங் குற்றமாகும்.**

**எதைஎதையோ வன்முறையைத் தூண்டுதல் என்று சொல்லும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, கஜேந்திர சிங் ஷெகாவத் மீது வழக்குப் பதிவு செய்து, சட்டப்படி உரிய குற்ற இயல் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிந்து கொள்ள மனித உரிமை ஆர்வலர்கள் ஆவலுடன் இருக்கிறார்கள் !**

# ஜி-20மாநாடு:ஒதுக்கியதுரூ.990கோடி; செலவிட்டதோ ரூ.4,100 கோடி!

## மிகப் பெரும் ஊழல்: எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, செப். 13 -*

*ஜி20 மாநாட்டை நடத்த ஒன்றிய பட்ஜெட்டில் ஒதுக்கிய நிதியை விட 300 சதவிகிதம் அதிகமாக செலவிட்டு ஊதாரித்தனத்தில் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.*

*ஜி20 மாநாட்டை நடத்த பட்ஜெட்டில் ரூ.990 கோடி ஒதுக்கிய நிலையில், தற்போது ரூ. 4 ஆயிரத்து 100 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒதுக்கப்பட்ட நிதியைக் காட்டிலும் கூடுதலாக ரூ. 3 ஆயிரத்து 110 கோடி அதிகமாக செலவிட்டுள்ளது. இந்த கூடுதல் நிதி ரூ. 3 ஆயிரத்து 110 கோடியும், மோடி அரசின் விளம்பரம் உள்ளிட்ட தேவையில்லாத செலவுகளுக்காகவே அள்ளி இறைக்கப் பட்டு உள்ளதாக எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.*

*முன்னதாக ஜி20 மாநாட்டிற்காக, ரூ. 2 ஆயிரத்து 700 கோடி செலவிட்டு, டெல்லி பிரகதி மைதானத்தில் 'பாரத் மண்டபம்' கட்டப்பட்டதாக பா.ஜ.க. ஜம்பம் அடித்திருந்தது. ஆனால், அந்த 'பாரத் மண்டபம்', மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்ததே, மழைத் தண்ணீரால் சூழப்பட்டது.*

*மழைத் தண்ணீர் வெளியேறுவதற்குக் கூட வசதிகள் செய்யப்படாத லட்சணத்தில்தான் மோடி அரசு பாரத் மண்டபத்தை கட்டியிருந்தது, பின்னர் வெளிச்சத்திற்கு வந்தது. ஏற்கெனவே பல்வேறு துறைகளில், நிர்ணயிக் கப்பட்ட செலவைக் காட்டிலும் கூடுதலாக செலவிட்ட வகைகளில், அரசுக்கு ரூ. 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஒன்றிய அரசின் தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரி குற்றம் சாட்டியிருந்தார்.*

*இதில், மிகப்பெரும் ஊழல் அரங்கேறியிருப்பதாக எதிர்க்கட்சிகள் இப்போதுவரை குற்றம் சாட்டி வருகின்றன.*

*ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எந்தப் பதிலும் கூறாத மோடி அரசு, மாறாக ஊழல்களை மறைக்கும் விதமாக, ஒரே நாடு, ஒரே தேர்தல் விவகாரத்தையும், சனாதனம் குறித்த பொய்ப்பிரச்சாரத்தையும் கட்டவிழ்த்து விட்டது.*

*இந்நிலையில்தான், ஜி20 மாநாடு பெயரிலும் மோடி அரசு ரூ. 3 ஆயிரத்து 110 கோடியை சூறையாடியிருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.*

*இதனைக் குறிப்பிட்டு கண்டனம் தெரிவித்துள்ள திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. சாஹேத் கோகலே, "இந்த தேவையில்லாத செலவு ரூ. 3 ஆயிரத்து 110 கோடியை, ஏன் பா.ஜ.க. வழங்கக்கூடாது?" என கேள்வி எழுப்பியுள்ளார்.*



பள்ளிக் கல்வித்துறை சார்பில் எழும்பூர், டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடத்தப் பெற்ற சென்னை வருவாய் மாவட்ட அளவிலான சதுரங்கப் போட்டியை, 2020ஆம் ஆண்டின் செஸ் கிராண்ட் மாஸ்டர் வர்ஷினி முன்னிலையில் கழக சட்டத்துறை இணை செயலாளரும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தொடங்கி வைத்தார்.